# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண்.62/2016**

பெயர்: **S.K. சேகர்** நாள்: 11.07.2025

பி.வா.சா.1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.1 – S.K. சேகர் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம்</u> 11:50

நான் 4-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்களில் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளேனா என்றால், ஆமாம். எனக்கு ஆங்கில எழுத்துக்கள் என்ன என்ன என்று எனக்கு தெரியுமா என்றால், தெரியும். அதே போல் எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால், தெரியும். நான் நிலம் வாங்கி விற்பது சம்மந்தமாக பல சொத்து பரிமாற்றங்களில் ஈடுபட்டுள்ளேன் என்றும் , ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றும் சொன்னால், நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை, நிலம் வாங்கி விற்பதும் செய்யவில்லை. ஆனால் எனது மகன் மற்றும் மகள்களுக்காக தோரயமாக 5, 6 சொத்துக்கள் வாங்கி வைத்துள்ளேன். நான் நிலங்களை வாங்கி வைத்துள்ள நிலையில், நிலங்களை எவ்வாறு வாங்குவது வில்லங்க சான்றிதழ் பார்வையிடுதல் ஆகிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால், வில்லங்க சான்றிதழ் பார்வையிடுவோம், அசல் ஆவணங்களை பார்வையிட்டு பின்புதான் கிரையம் செய்வோம். நான் அரசியல் பிரமுகர் என்றும், அரசியல் கட்சியின் பொறுப்பில் இருக்கிறேனா என்றால், இல்லை. 17.07.2009 தேதியன்று ஏற்படுத்திய பத்திர எண். 1683/2009 கொண்ட 2-ம் பிரதிவாதி வெங்டேஷ்வரன் பெயரிலுள்ள கிரைய ஆவணத்தை எனது தரப்பில் EX.B1 ஆக தாக்கல் செய்துள்ளேனா என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் EX.B2 ஆவணமானது எனது பெயரில் 2-ம் பிரதிவாதி வெங்டேஷ்வரன் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் என்றால், சரிதான். இந்த சொத்தை பொறுத்து தான் வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் EX.B2 ஆவணத்தில் பக்கல் 2-ல் "எனக்கு கிரையம் கொடுத்த வெங்கடேஷ்வரனுக்கு 17.07.2009 தேதியிட்ட சங்ககிரி சார்பதிவாளர் அலுவலக பத்திர எண். 1683/2009" என்று எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் EX.B1

ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரத்தில் பக்கம் 7-ல் "இதன் மத்தியில் புஞ்சை ஏக்கர்.0.42 செண்ட் நிலம் பூராவும்" என்று எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். இதில் 31 செண்ட் நிலம் விற்றது போக மீதி 11 செண்ட் நிலத்தை நான் கிரையம் வாங்கி கொண்டேன் என்று சொன்னால், நான் 11 செண்ட் நிலத்தை அளவீடு செய்து கிரையம் வாங்கினேன். இந்த சொத்தை பொறுத்து நான் பொது அதிகார பத்திரம் பெற்றுள்ளேனா என்றால், சரிதான். பொது அதிகார பத்திரத்தையும், பொது அதிகார பத்திரத்தை இரத்து செய்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் பொது அதிகார முகவர் என்ற முறையில் என்னுடைய மனைவி கௌசல்யா பெயருக்கு பதிவு செய்த கிரைய ஒப்பந்த பத்திரம் 11.02.2013 தேதியன்று பத்திர எண். 454/2013 சுவாதீனம் செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் செய்துள்ளேனா என்றால், சரிதான். ( வழக்கில் குறிப்பிடப்படாத கிரைய ஒப்பந்த ஆவணம் ஆட்சேபனையுடன் **EX.A**10- ஆக குறியீடு செய்யப்படுகிறது). ஒப்பந்த பத்திரத்தில் நான் 2 ½ லட்சத்தை முன்தொகையாக பெற்றுக் கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான், நான் முன்தொகையாக பெற்ற ரூ.2 ½ லட்சத்தை எனக்கு பொது அதிகாரம் கொடுத்த வெங்கடேஷ்வரனுக்கு கொடுத்த இரசீது பெற்றுக் கொண்டேனா என்றால், இல்லை, நான் பணத்தை கொடுத்து கிரையம் பெற்றுக் கொண்டேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன் என்றும் வில்லங்க விவகாரங்கள் உள்ள சொத்துக்களை வாங்குவது வழக்கம் என்றும் குடிப்பழக்கம் உள்ள வெங்கடேஷ்வரனுக்கு பணம் ஏதும் கொடுக்காமல் பொது அதிகார பத்திரம் வழக்கு சொத்தை பொறுத்து பெற்றுக் கொண்டு அதனை பயன்படுத்தி எனது மனைவி பெயரில் ஒரு பதிவு செய்த கிரைய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்தி பின்னிட்டு மோசடியாக என் பெயருக்கு 11 செண்ட் நிலத்தை வெங்கடேஷ்வரனிடமிருந்து கிரையம் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் **EX.B**2 ஆவணத்தின்படி எனது பெயரில் ஏற்பட்ட விற்கிரையம் ரூ. 6,14,000/-ற்கு கிரையம் பெறப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் **EX.A**10 ஆவணத்தில் பக்கம் 2-ல் இதே வழக்கு சொத்திற்கு 2013-ம் ஆண்டு விற்கிரைய மதிப்பு ரூ.3,50,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் கிரையம் பெற்றுள்ளதாக தாக்கல் செய்துள்ள **EX.B**2 ஆவணத்தில் பக்கம் 2-ல் எனக்கு கிரையம் கொடுத்த வெங்கடேஷ்வரனுக்கு 17.07.2009 தேதியன்று ஏற்படுத்திய பத்திர எண். 1683/2009 ஆவணப்படி தனக்கு பாத்தியப்பட்டிருந்த 42 செண்ட்டில் 11 செண்ட்

விற்கப்பட்டுள்ளது என்று கண்டுள்ளது என்றால், சரிதான். அந்த 42 செண்ட் நிலமும் காலிநிலம் புஞ்சை ஏக்கர் 0.42 செண்ட் என்று EX.B1-ல் கண்டுள்ளது என்றால், சரிதான். நான் எனது EX.B2 ஆவணத்தில் புஞ்சை ஏக்கர் 0.11 செண்ட்டுக்கு 4796 சதுரடிகள் கொண்ட மனைநிலம் பூராவும் மற்றும் இதில் உள்ள 10 அடி * 11 அடி அளவுள்ள 110 சதுரடிகள் மற்றும் RCC தார்சு வீடு ஒன்று பூராவும், மேற்படி வீட்டிற்கு கிழபுறம் ஒட்டினாற்போல் 6 அடி * 23 அடி அளவுள்ள 138 சதுரடிகள் உள்ள கள்ளிக்கோட்டை ஓடு வேய்ந்த வில்லை வீடு ஒன்று பூராவும் என்று இந்த வீடுகள் அனைத்தையும் நான் சேர்த்து எழுதி கொண்டேன் என்றால், சரிதான். மூல ஆவணத்தில் இல்லாத வீடுகளை சேர்த்து மோசடியாக நான் கிரையம் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 2-ம் பிரதிவாதி வெங்கடேஷ்வரனுக்கு EX.B2 ஆவணத்தின்படி பாத்தியப்பட்ட 42 செண்ட் காலிநிலத்தில் 31 செண்ட் நிலத்தை பாலசுப்ரமணி என்பவருக்கு 2012-ம் ஆண்டில் கிரையம் கொடுத்தது போக மீதி 11 செண்ட் காலிநிலம் மட்டும் தான் எனக்கு கிரையம் கொடுத்த வெங்கடேஷ்வரனுக்கு பாத்தியப்பட்டது என்றும், அந்த 11 செண்ட் நிலத்தை நான் என் பெயருக்கு கிரையம் செய்து கொள்ள வேண்டி குடிப்பழக்கம் உள்ள வெங்கடேஷ்வரனுடன் பழகி மோசடியாக பவர் பத்திரம் தயார் செய்து எனது மனைவி பெயருக்கு கிரைய ஒப்பந்த பத்திரம் தயார் செய்து பின்னிட்டு 11 செண்ட் காலிநிலத்தை மட்டும் மூல பத்திரப்படி கிரையம் செய்து கொள்ளாமல் வாதிகளை அந்த கிராமத்தை விட்டே வெளியேற்ற வேண்டும் என்று என்னுடைய அரசியல் மற்றும் பணசெல்வாக்கை பயன்படுத்தி வீடுகளையும் சேர்த்து மோசடியாக கிரையம் செய்து கொண்டேன் என்று சொன்னால், சரியல்ல. எனக்கு 31 செண்ட் நிலம் விற்றது தெரியாது என்றும் மற்றும் 50 செண்ட் நிலத்தை விற்றது பற்றியும் வெங்கடேஷ்வரனுடைய தகப்பனார் அய்யமுத்துவிற்கு எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டது என்றும் எனக்கு தெரியாது என்றும் வழக்கு நடத்துகிறேன் என்றால், சரிதான். நான் வெங்கடேஷ்வரனுடைய கிரைய பத்திரம் EX.B1-ஐ மட்டும் பார்த்து கிரையம் செய்தததாக நான் கூறுகிறேன் என்றால், சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் 42 செண்ட் காலிநிலம் இருந்ததாகவும் அதில் நான் 11 செண்ட் நிலம் கிரையம் வாங்கியதாக EX.B2 ஆவணம் ஏற்பட்டதாக சொன்னால், சரிதான், ஆனால் 11 செண்ட் நிலத்தில் இருந்த வீடு மற்றும் காலி நிலத்தோடு தான் நான் கிரையம் வாங்கினேன். வெங்கடேஷ்வரனுடைய கிரைய பத்திரம் EX.B1 வீடுகள் குறிப்பிடப்பட்டுள்ளதா இல்லையா என்று எனக்கு தெரியாது. EX.B1 நிலத்தில் வீடுகள் இல்லை என்றும் அதை

நான் மோசடியாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல. 2-ம் பிரதிவாதியின் தகப்பனார் அய்யமுத்துவிற்கு மொத்தத்தில் 97 ½ செண்ட் நிலம்பாத்தியப்பட்டிருந்தது என்றும், அதில் பாலசுப்ரமணிக்கு 50 செண்ட் நிலம் கிரையம் கொடுக்கப்பட்டது என்றும், அதன் பின்னர் 42 செண்ட் நிலம் 2-ம் பிரதிவாதி வெங்கடேஷ்வரனுக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றும் வெங்கடேஷ்வரன் 31 செண்ட் நிலத்தை பாலசுப்ரமணிக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றும், மீதமுள்ள 11 செண்ட் காலிநிலத்தை நான் கிரையம் பெற ஏற்பாடு செய்ததில் வெங்கடேஷ்வரனுக்கே உரிமையில்லாத வாதிகளுக்கு உரிமையான வீடுகளையும் சேர்த்து மோசடியாக கிரையம் செய்து கொண்டேன் என்றால், சரியல்ல. மீதம் 5 ½ செண்ட் நிலமும் அதில் இருந்த வீடுகளும் வாதிகளுக்கு சொந்தமானது என்றும் சொன்னால், சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம்.01:05

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.07.11 16:36:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.